

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 AUGUST

மலர்: 8 இதழ்: 11 ஆகஸ்டு 2015 விலை: ரூ. 5



## மனிதகுலத்தை ஒருங்கிணைக்கும் இஸ்லாமிய பண்டிகைகள்



# பர்மிங்காமில் நபிகள் காலத்து குர்ஆன் பிரதி

**முஹம்மது நபி காலத்தில் கையால் எழுதப்பட்ட உலகின் பழம்பெரும் குர்ஆன் கிடைத்தது (தகவல்: BBC மற்றும் மாலைமலர்) லண்டன், ஜூலை 22–**

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஹம்மது நபி(ஸல்) காலத்தில் கையால் எழுதப்பட்ட உலகின் மிகப்பழைமையான குர்ஆனை இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

"ரேடியோகார்பன்" பரிசோதனைக்கு இந்த குர்ஆனை உட்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், இது கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர்.

எனினும், இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் முஹம்மது நபி(ஸல்) வாழ்ந்த சமகாலத்தில் கி.பி. 570 மற்றும் 632-க்கு இடைப்பட்ட காலத்தில் இந்த குர்ஆன் எழுதப்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது.

ஆராய்ச்சிக் குழுவில் இடம் பெற்றிருந்த பேராசிரியர் டேவிட் தாமஸ், ”நிச்சயமாக இது முஹம்மது நபி வாழ்ந்த காலத்தில் அவர் சொல்லக் கேட்டு அவரின் தோழரால் எழுதப்பட்டிருக்கும்” என்று சொல்கிறார். "இதை எழுதியவர் முஹம்மது நபியவர்களை நேரடியாக சந்திதிருக்கவும் அவர் பிரச்சாரம் செய்வதை கண்டும் கேட்டும் இருக்கக் கூடும் என்கிறார் அவர்

இந்த குழுவிடம் கிடைத்துள்ள அந்த குரானின் இரண்டு பக்கங்களும் பண்டைக்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட தோலின் மீது, அரபு மொழியின் முந்தைய வடிவமான "ஹிஜாஸி" முறையில் மையினால் வசனங்களாக எழுதப்பட்டுள்ளது.

அந்த இரு பக்கங்களிலும் குர்ஆனின் 18 முதல் 20 வரையிலான சூறாக்களின் (அத்தியாயம்) வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 AUGUST**

**மலர்: 8 இதழ்: 11 ஆகஸ்டு 2015 விலை: ரூ. 5**

## பொருளடக்கம்

| | |
|---|---|
| மனிதகுலத்தை ஒருங்கிணைக்கும் இஸ்லாமிய பண்டிகைகள் | 2 |
| இயற்கை தாங்கி நிற்கும் பாடங்கள் | 4 |
| கற்பழிப்பு தலைநகர் | 6 |
| மெய்வருத்தத்தில் ஆன்மீக நேட்டம் இல்லை | 7 |
| பெண்களே உங்கள் உடல் நலன் நாடி...! | 9 |
| சொர்க்கத்துக் காட்சிகள் | 15 |
| பொருள் போதையால் அழிந்த நண்பன் | 16 |
| உடல்நலம் பேணுதல் மார்க்கக் கடமை | 19 |
| ஆரோக்கியம் பேணும் வழிகள் | 21 |
| நபிகளார் கூட்டிய முதல் பொதுக்கூட்டம் | 23 |
| நூற்றாண்டுகள் ஆகியும் அழியாத வேதம் | |

published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

# மனிதகுலத்தை ஒருங்கிணைக்கும் இஸ்லாமிய பண்டிகைகள்

உலகெங்கும் எல்லா சமுதாய மக்களுக்கும் பண்டிகைகள் உண்டு. நாத்திகக் கொள்கைகளைக் கொண்டவர்களும் கூட தங்கள் தலைவர்களின் பிறந்த நாளையோ அல்லது ஏதாவது சிறப்பு நிகழ்வுகள் நடந்த நாட்களையோ கொண்டாடவே செய்கின்றனர்.

இஸ்லாம் என்ற இறைவனின் மார்க்கமும் அதனைப் பின்பற்றுவோருக்கு இரண்டு பண்டிகைகளைக் கற்பிக்கிறது.

1. ஈகைத் திருநாள் எனும் ரம்ஜான் பண்டிகை
2. தியாகத் திருநாள் எனும் பக்ரீத் பண்டிகை

மற்ற பண்டிகைகளுக்கும் இஸ்லாமிய பண்டிகைகளுக்கும் இடையே பல வேறுபாடுகளை நீங்கள் காணமுடியும்.

### 1. பண்டிகைகளுக்கும் கொண்டாடுவோருக்கும் உள்ள தொடர்பு:

உலகின் பெரும்பாலான பண்டிகைகளைக் கொண்டாடுவோரிடம் எதற்காக நீங்கள் இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடுகிறீர்கள் என்று கேட்டால், “நாங்கள் எங்களின் மூதாதையர்கள் இதைக் கொண்டாடினார்கள், அதனால்தான் கொண்டாடுகிறோம்” என்று கூறுவார்கள். பண்டிகை தொடர்பான நபர்களோடும் சம்பவங்களோடும் அவர்களுக்கும் தொடர்பைக் காண்பது அரிதே. ஆனால் இஸ்லாமியப் பண்டிகைகள் இதில் வேறுபட்டு நிற்பதைக் காணலாம்.

முக்கியமான இஸ்லாமியக் கடமைகளை ஒட்டியே இஸ்லாமிய பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

### ஈகைத் திருநாள் எனும் ரம்ஜான் பண்டிகை

திருக்குர்ஆன் என்ற அற்புத வாழ்வியல் வழிகாட்டி நூலை தந்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறும் முகமாக ரமலான் மாதம் பகல் முழுக்க உண்ணாமல் விரதம் இருந்தும் இரவில் நின்று வணங்குவதிலும் வழிபாடுகளிலும் முஸ்லிம்கள் ஈடுபடுகிறார்கள். இந்த மாதத்தை நிறைவு செய்யும்போது இயற்கையான சந்தோஷத்தை வெளிப்படுத்தும் நாளாக ஈதுல் பித்ர் என்ற ஈகைத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

### தியாகத் திருநாள் எனும் பக்ரீத் பண்டிகை

சுமார் 5000 வருடங்களுக்கு முன் ஒரு முன்மாதிரி வழிகாட்டியாகவும் இறைத்தூதராகவும் திகழ்ந்த இப்ராஹீம் என்பவரின் தியாகத்தை நினைவுகூரும் முகமாகவும் அதில் இருந்து பெறும் படிப்பினையை வாழ்வில் நடைமுறைப்படுத்தவும் ஒவ்வொரு முஸ்லிம்களும் பணிக்கப்படுகிறார்கள். எனவே வசதியுள்ள ஒவ்வொருவரும் ஒரு பிராணியை கூட்டாகவோ தனித்தோ பலியிட்டு அதை ஏழைகளோடு பங்கிட்டு பகர்ந்து உண்பதே பக்ரீத் பண்டிகை. அதேபோல் பொருள் வசதியும் உடல்நலமும் கொண்டோர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள ஹஜ் என்ற கடமையின் முடிவும் இதையொட்டியே அமைகிறது. எனவே இதற்கு ஹஜ்ஜுப் பெருநாள் என்றும் கூறுவர்.

**உ. அனைவரையும் அரவணைத்துக் கொண்டாடுதல்**

இஸ்லாமியப் பண்டிகைகளை யாரும் தனித்துக் கொண்டாட முடியாது.

● ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருக்கும்போதும் ஏழைகளை அரவணைத்தே நோன்பை அனுஷ்டிக்க இஸ்லாம் வலியுறுத்துகிறது, யாராவது நோன்பை அனுஷ்டிப்பவருக்கு நோன்பு திறக்க உண்ணக் கொடுத்தால் அவரது நோன்பின் நற்கூலி போன்றே கொடுப்பவர்களுக்கும் எழுதப்படும் என்பது நபிமொழி. இதன் காரணமாக தினமும் பள்ளிவாசல்களில் கூட்டாக நோன்பு திறப்பதையும் பகிர்ந்து உண்ணுவதையும் நீங்கள் காண்கிறீர்கள்.

அதேபோல் நோன்பு மாதத்தை நிறைவு செய்யும் நாளான ரம்ஜான் பண்டிகையின் அன்று ஏழைகளை அவர்களின் வீடுதேடிச் சென்று நாம் உண்ணும் அதே உணவுதானியங்களை வழங்கிவிட்டே பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்று இஸ்லாம் கற்பிக்கிறது. இதற்கு ஃபித்ரா என்று பெயர். அதாவது சமூகத்தில் நலிந்தவர்களோடு பெருநாளின் சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ள செல்வந்தர்களைக் கட்டாயப்படுத்துகிறது இஸ்லாம்.

● பக்ரீத் பண்டிகை அன்று பலியிடப்படும் பிராணிகளின் மாமிசத்தின் மூன்றில் ஒரு பகுதியை உறவினர்களோடும் இன்னொரு பகுதியை சமூகத்தில் உள்ள ஏழைகளோடும் பகிர்ந்து உண்ணுமாறு கற்பிக்கப்படுகிறது.

● பொதுவாகவே எல்லாத் தொழுகைகளையும் பள்ளிவாசல்களில் கூட்டாக தோளோடு தோள் சேர்ந்து அணிவகுத்துத் தொழ வலியுறுத்தும் இஸ்லாம், இந்த பெருநாள் தொழுகைகளை பெரும் திடல்களில் ஊர் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து நிறைவேற்றப் பணிக்கிறது.

**3. ஒழுக்கமும் கட்டுப்பாடும் பேணுதல்**

பண்டிகை, கொண்டாட்டம் என்ற பெயரில் மதுவருந்துதல், வீண் விரயங்கள் செய்தல், பட்டாசு வெடித்தல், சுற்றுப் புற சூழலை மாசுபடுத்துதல், பொதுமக்களுக்கு இடையூறு செய்தல் அந்நிய ஆண்களும் பெண்களும் ஆடல் பாடல்கள் என்று வரம்புகள் மீறி கலத்தல் போன்ற அனைத்தையும் இஸ்லாம் தடை செய்கிறது. வரம்புகள் மீறாத விளையாட்டுகளுக்கும் பொழுதுபோக்குகளுக்கும் அன்று தடை இல்லை.

ஒழுக்கம் பேணுதலை எந்த சூழலிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை. மேலும் இஸ்லாமிய பண்டிகைகள் இறைவணக்கத்தை கொண்டே ஆரம்பிக்கப்படும். பெருநாள் அன்று முதல் வேலை தொழுகையே. பண்டிகைகள் அன்று அதிகமாக தக்பீர் (இறைவனின் பெருமையை) முழங்குவது வலியுறுத்தப்படுகிறது:

நீங்கள் (ரமளானின்) எண்ணிக்கையை நிறைவு செய்யுங்கள் உங்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டியதற்காக அவனை நீங்கள் (தக்பீர் முழக்கத்தினால்)பெருமைப்படுத்துங்கள். (இதன் மூலம்) நீங்கள் நன்றி செலுத்துபவர்களாக திகழலாம். (அல்குர்ஆன் 2:185)

ஆக, இறைவனின் தூய மார்க்கமான இஸ்லாம் ஒன்றே மனிதகுலம், ஒருவனே இறைவன் என்னும் தனது கொள்கையை பண்டிகைகளின் போது இன்னும் வீரியமாக வலியுறுத்தி மக்களை செயல்பட வைப்பதை ஆராய்வோர் காணலாம்.

# இயற்கை தாங்கி நிற்கும் பாடங்கள்

பாமரர்களையும் படித்தவர்களையும் தங்களை சுற்றி சதா நடந்துகொண்டிருக்கும் எண்ணற்ற அற்புதங்களைப் பார்வையிடுமாறு அழைக்கிறான் இவைகளைப் படைத்தவன். அவ்வாறு மனிதனை பகுத்தறிவுகொண்டு சிந்திக்க வைத்து அவனது வாழ்வின் நோக்கத்தையும் இந்த வாழ்க்கைக்குப் பிறகு காத்திருப்பதையும் பற்றி நினைவூட்டுவதை திருக்குர்ஆனில் பற்பல இடங்களில் காணலாம். இதோ கீழ்கண்ட வசனங்களிலும்....

36:33. அன்றியும், இறந்து (தரிசாகக்)கிடக்கும் பூமி அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும் (பின்னர் மழையினால்) அதனை நாமே உயிர்ப்பித்து, அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம் அதிலிருந்துதான் இவர்கள் உண்கிறார்கள்.

36:34. மேலும், அதில் நாம் பேரீத்த மரங்களினாலும், திராட்சை(க் கொடி)களினாலும் தோட்டங்களை உண்டாக்குகிறோம் இன்னும் அதில் நீரூற்றுக்களைப் பீறிட்டு ஓடச்செய்கின்றோம்.

36:35. அதன் பழவகைகளை அவர்கள் உண்பதற்காக் ஆனால் அவர்களுடைய கைகள் இதை உண்டாக்கவில்லை ~ ஆகவே அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?

36:36. பூமி முளைப்பிக்கின்ற (புற்பூண்டுகள்) எல்லாவற்றையும், (மனிதர்களாகிய) இவர்களையும், இவர்கள் அறியாதவற்றையும் ஜோடி ஜோடியாகப் படைத்தானே அவன் மிகவும் தூய்மையானவன்.

இவையும் இன்னும் எண்ணற்ற அருட்கொடைகளையும் சலிக்காமல் தந்துகொண்டு இருக்கிறது இந்த பூமி என்ற பொக்கி'ம்! அனைத்துமே இலவசமாக! இவையெல்லாம் நிகழ்வது இந்த மனிதன் என்ற ஒரு ஜீவி இங்கிருப்பதனால்தானே!

வானத்திலும் அற்புதங்களுக்குப் பஞ்சமா?

10:5. அவன்தான் சூரியனைச் (சுடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு(ச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான் அல்லாஹ் உண்மை(யாக தக்க காரணம்) கொண்டேயல்லாது இவற்றைப் படைக்கவில்லை ~ அவன் (இவ்வாறு) அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கின்றான்.

10:6. நிச்சயமாக இரவும், பகலும் (ஒன்றன் பின் ஒன்றாக) மாறி வருவதிலும், வானங்களிலும், பூமியிலும் அல்லாஹ் படைத்துள்ள (அனைத்)திலும் பயபக்தியுள்ள மக்களுக்கு (நிரம்ப) அத்தாட்சிகள் இருக்கின்றன.

ஆம், இந்த சூரியனும் சந்திரனும் இன்ன பிற கோள்களும் நட்சத்திரங்களும் எல்லாம் படைக்கப் பட்டு இருப்பதும் இங்கு இரவும் பகலும் மாறிமாறி வந்து கொண்டு இருப்பதும் இன்ன பிற அருட்கொடைகள் அனைத்தும் வீணுக்காக அல்ல! மனிதன் என்ற ஒரு ஜீவி இங்கு வாழ்ந்துக்கொண்டு இருப்பதால்தானே! இவை தக்க உருவிலும் அளவையிலும் படைக்கப்பட்டு சமநிலை தவறாது இயக்கப்

பட்டு வருவது மனிதன் என்ற ஜீவியை மையப்படுத்தியே என்பதை சிந்திப்போர் உணரலாம்.

தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியை சுற்றிவரும் கோளம் சந்திரன். அதைப் போலவே சூரியனை மையமாகக்கொண்டு தன்னைத்தானே சுற்றிவரும் கோளம் நாம் வாழும் பூமி. இவற்றின் சுழற்சி வேகத்திலோ இவைகளுக்கு இடையேயுள்ள தூரத்திலோ ஒரு சிறிதளவு மாற்றம் நேர்ந்தாலும் மனித வாழ்வையே பாதித்து அவனை அழித்து விடும். உதாரணமாக சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான தூரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது சற்று கூடிவிட்டால் குளிரில் நாம் இறந்து விடுவோம். அது சற்று குறைந்து விட்டாலோ வெப்ப மிகுதியைத் தாங்கமுடியாமல் இறந்து விடுவோம். இதைப்போல ஒவ்வொன்றையும் சிந்தித்தால் இப்பிரபஞ்சத்தின் இயக்கத்தின் ஒரே நோக்கம் மனித வாழ்வை இங்கு தக்க வைப்பதே என்பது பகுத்தறிவு நமக்கு சொல்லும் பாடமாகும்.

அவ்வாறென்றால் இந்த மனித வாழ்வின் நோக்கம்தான் என்ன?

நம்மைச்சுற்றி நாம் அன்றாடம் காணும் அல்லது புழங்கும் பொருட்கள் ஒவ்வொன்றும் ஒரு நோக்கத்துடனேயே படைக்கப் பட்டிருப்பதை நாம் காண்கிறோம். அவ்வாறெனில் இந்த மனிதன் என்ற அதிநுட்பமும் சிக்கலும் நிறைந்த ஒரு தயாரிப்பின் (most complicated product) பின்னால் ஒரு நோக்கம் இல்லாமல் போகுமா?

அதைத்தான் இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன.

18:7. (மனிதர்களில்) அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக, நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம்.

அதாவது இந்த குறுகிய வாழ்வு என்பது ஒரு பரீட்சை என்பதும் இந்த பூமி என்பது அதற்கான பரீட்சைக் கூடம் என்பதும் நாம் உறுதியாக அறிய முடிகிறது. இந்த வாழ்க்கை என்னும் பரீட்சை ஒருநாள் முடிவுக்கு வரும், இவ்வுலகமும் அழியும், மீண்டும் நாம் விசாரணைக்காக எழுப்பப் படுவோம், நம்மைப் படைத்தவனை சந்திக்க உள்ளோம் என்னும் சத்தியத்தை பெரும்பாலோர் மறந்து வாழ்கிறார்கள். அவர்களைப் பற்றியும் இறைவன் எச்சரிக்கிறான்...

10:7 நிச்சயமாக எவர்கள் நம்மைச் சந்திப்பதை(ச் சிறிதும்) நம்பாது, இவ்வுலக வாழ்க்கையை (மிகவும்) விரும்பி, அதில் திருப்தியடைந்து கொண்டும் இன்னும் எவர்கள் நம் வசனங்களைப் புறக்கணித்துக் கொண்டும் இருக்கிறார்களோ ~

10:8. அவர்கள் சம்பாதித்த (தீமைகளின்) காரணமாக அவர்கள் தங்குமிடம் நரகம் தான்.

ஆம், அவர்களுக்கு இந்த சத்தியத்தை பூமி வாழ்க்கையின் போது எடுத்துச் சொன்னபோது அவர்கள் இவற்றை அப்பட்டமாக மறுத்தார்கள், கேலி செய்தார்கள். இறைவனுக்கு நன்றி மறந்து வாழ்ந்தார்கள். அதற்கான

தண்டனையே நரகம் என்பது!

ஆனால் இறைவன் கூறுபவற்றை நம்பி அதன்படி செயல்புரிந்த நல்லோரின் நிலையோ மிக்க உயர்வானதாக இருக்கும் என்கிறான் இறைவன்!

**10:9.** நிச்சயமாக எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவன் அவர்கள் இறைநம்பிக்கை கொண்ட காரணத்தினால் நேர் வழிகாட்டுவான் இன்பமயமான சுவனபதிகளில் அவர்களுக்குக் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும்.

அந்த சொர்க்கம் மட்டுமா? அங்கு அவர்கள் இவ்வுலகில் காணத் துடித்துக்கொண்டிருந்த தங்கள் இறைவனை நேரடியாகக் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சியைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

**10:10.** அதில் அவர்கள்: "(எங்கள்) அல்லாஹ்வே! நீ மகா பரிசுத்தமானவன்" என்று கூறுவார்கள் அதில் (தம் தோழர்களைச் சந்திக்கும் போது) அவர்களின் முகமன் ஸலாமுன் என்பதாகும். "எல்லாப் புகழும் அகிலங்கள் அனைத்துக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே" என்பது அவர்களது பிரார்த்தனையின் முடிவாகவும் இருக்கும்.
(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது பொருள்)

## "கற்பழிப்பு" தலைநகர் (RAPE CAPITAL)

*"கற்பழிப்பு" தலைநகர் எது என்று தெரியுமா?*

ஆம், அது பாருக்குள்ளே நல்ல நாடு என்று நாம் புகழ்பாடிக் கொண்டிருக்கும் நம் பாரத நாட்டின் தலைநகரான டெல்லிதான்!

- ஒரு நாளில் 6 கற்பழிப்புகள், 13 பாலியல் வழக்குகள்
- பெரும்பான்மையான குற்றவாளிகளின் வயது 25 - 35
- 80% கற்பழிப்புகள், வீட்டில் நடக்கின்றன
- வருடா வருடம், கற்பழிப்புகள் அதிகரிக்கின்றன

தகவல்: newindianexpress.com

### இதற்கு காரணம் என்ன?

- தனிமனித நல்லொழுக்கம் பற்றி யாரும் கவலைப் படாமை!
- சற்றும் வலுவில்லாத, ஓட்டைகள் நிறைந்த, குற்றவாளிகள் சிக்காமல் தப்பித்துக் கொள்ளும்படியான சட்டங்கள்.
- இருக்கும் சட்டங்களையும் நடைமுறைப்படுத்த குற்றவாளிகள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், ஆன்மீகத் தலைவர்கள் இவர்களின் குறுக்கீடு!
- அறவே சமூகப் பொறுப்புணர்வற்ற, விலைபோன ஊடகங்கள்!
- எது நடந்தாலும் விரைவிலேயே மறந்துவிடும் பொதுஜனம்!

எங்கே போகிறோம் நாம்? (நன்றி: நாடோடித் தமிழன்)

# மெய் வருத்தத்தில் ஆன்மீக நேட்டம் இல்லை!

● **உதாரணம் ஒன்று**

நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் என்னிடம், ”அப்துல்லாஹ், நீர் பகலெல்லாம் நோன்பு நோற்று, இரவெல்லாம் நின்று வணங்குவதாக எனக்குக் கூறப்படுகிறதே!“ என்று கேட்டார்கள். நான் ”ஆம்! இறைத்தூதரே!“ என்றேன். நபி (ஸல்) அவர்கள் ”இனி அவ்வாறு செய்யாதீர்! (சில நாட்கள்) நோன்பு வையும் (சில நாட்கள்) விட்டுவிடும்! (சிறிது நேரம்) தொழும் (சிறிது நேரம்) உறங்கும்! ஏனெனில், உம் உடலுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் உமக்கிருக்கின்றன. உம் கண்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கிருக்கின்றன. உம் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கிருக்கின்றன. உம் விருந்தினருக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உமக்கு இருக்கின்றன!

ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நீர் நோன்பு நோற்பது உமக்குப் போதுமானதாகும்! ஏனெனில், (நீர் செய்யும்) ஒவ்வொரு நற்செயலுக்கும் பகரமாக உமக்கு அதுபோன்ற பத்து மடங்கு (நன்மை)கள் உண்டு! (இந்தக் கணக்குப்படி) இது காலமெல்லாம் நோன்பு நோற்றதாக அமையும்!“ என்று கூறினார்கள்.

நான் சிரமத்தை வலிய ஏற்றுக்கொண்டேன் அதனால், என்மீது சிரமம் சுமத்தப்பட்டுவிட்டது! “அல்லாஹ்வின் தூதரே! நான் வலுவுள்ளவனாக இருக்கிறேன்!“ என்று நான் கூறினேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் ”தாவூத் நபி (அலை) அவர்கள் நோன்பு நோற்றவாறு நீர் நோன்பு நோற்பீராக! அதைவிட அதிகமாக்க வேண்டாம்!“ என்றார்கள். ”தாவூத் நபியின் நோன்பு எது?“ என்று நான் கேட்டேன். ”வருடத்தில் பாதி நாட்கள்!““ என்றார்கள்.

”அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் வயோதிகம் அடைந்த பின் ”நபி (ஸல்) அவர்களின் சலுகையை நான் ஏற்காமல் போய் விட்டேனே!“ என்று (வருத்தத்துடன்) கூறுவார்கள்!“ என அபூசலமா அவர்கள் கூறுகிறார்கள்.

நூல்: புகாரி (1975)

மேற்படி உதாரணத்தில் இருந்து அதிகமாக நோன்பு என்ற வணக்கத்தை செய்தவரை அழைத்து நபி (ஸல்) அவர்கள் பாராட்டவில்லை. மாறாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வணக்கத்தின் பெயரால் தன்னுடைய ஆரோக்கியத்தை கெடுத்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறார்கள்.

அடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் நடந்த மற்றொரு நிகழச்சியும் கவனிக்கத்தக்கது.

● **உதாரணம் இரண்டு**

நபி (ஸல்) அவர்கள் (வெள்ளிக்கிழமை) உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது ஒரு மனிதர் வெயிலில் நின்று கொண்டிருப்பதைக்

கண்டார்கள். அவர் குறித்து (மக்களிடம்) கேட்டார்கள். மக்கள், "(இவர் பெயர்) அபூ இஸ்ராயீல். இவர், நின்று கொண்டே இருப்பேன் உட்காரமாட்டேன் எனவும், நிழலில் ஒதுங்கமாட்டேன் (வெயிலில் தான் இருப்பேன்) எனவும், (யாரிடமும்) பேசமாட்டேன் நோன்பு நோற்பேன் எனவும் நேர்ந்து கொண்டுள்ளார்" என்று கூறினார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள், "அவருக்கு உத்தரவிடுங்கள்: அவர் பேசட்டும். நிழல் பெறட்டும். உட்காரட்டும். நோன்பை (மட்டும்) நிறைவு செய்யட்டும்" என்று சொன்னார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), நூல் : புகாரி (6704)*

ஆரோக்கியத்தை கெடுக்கும் விதமாக நேர்ச்சை செய்வதையும் நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள் என்பதை இந்த நபிமொழியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

"வலிமையானவனாக இரு. இறைவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவன் பலமான இறைநம்பிக்கையாளனே! எனவே பலமான இறை நம்பிக்கையாளனாக இருப்பதற்கு ஆரோக்கியம் அவசியம். அந்த ஆரோக்கியத்திற்கு ஆசைப்படவேண்டும். அதற்காக முயற்சிக்க வேண்டும்.

பலமான இறைநம்பிக்கையாளர், பலவீனமான இறை நம்பிக்கையாளரை விடச் சிறந்தவரும் இறைவனுக்கு மிகவும் விருப்பமானவரும் ஆவார். ஆயினும், அனைவரிடமும் நன்மை உள்ளது. உனக்குப் பயனளிப்பதையே நீ ஆசைப்படு. இறைவனிடம் உதவி தேடு. நீ தளர்ந்து விடாதே. உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும்போது, "நான் (இப்படிச்) செய்திருந்தால் அப்படி அப்படி ஆயிருக்குமே!" என்று (அங்கலாய்த்துக்) கூறாதே.

மாறாக, "இறைவனின் விதிப்படி நடந்துவிட்டது. அவன் நாடியதைச் செய்துவிட்டான்" என்று சொல். ஏனெனில், ("இப்படிச் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே" என்பதைச் சுட்டும்) "லவ்" எனும் (வியங்கோள் இடைச்) சொல்லானது ஷைத்தானின் செயலுக்கே வழி வகுக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் :முஸ்லிம் (5178)*

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும். - ஓராண்டு சந்தா : Rs. 60-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைகள் விஷயமாக தொடர்பு எண்: 09742899305 / 07353307054

**House of Peace,** PO Box no. 1726, Bangalore 560017

**ஆசிரியர் உரை**

# பெண்களே உங்கள் உடல் நலம் நாடி.....

நீங்கள் தினமும் நின்று அழகு பார்க்கும் கண்ணாடியின் முன் ஒருகணம் நின்று பாருங்கள்..... இம்முறை அழகு பார்ப்பதற்காக அல்ல... அதைத்தான் தினமும் பார்க்கிறீர்களே!

இப்போது நீங்கள் நிர்ப்பது... உங்களை நீங்கள் அறிந்து கொள்வதற்காக...

உங்கள் கண்கள், மூக்கு, வாய், காதுகள் பற்கள், நாக்கு, தலைமுடி என தொடங்கி அடிமுதல் முடிவரை சற்று பார்வை இடுங்கள்...

எத்தனை எத்தனை அற்புதங்களை நீங்கள் தாங்கி நிற்கிறீர்கள்! கோடிக்கணக்கான செல்கள் வெளியே தோலாகவும் உள்ளே சதையாகவும் ஒரு இடத்தில் கண்ணாகவும் நாக்காகவும் மூக்காகவும் மூளையாகவும் மறு இடத்தின் கல்லீரல் நுரையீரல், கணையம், இதயம் என உங்களை இயக்கிக்கொண்டிருக்கும் உறுப்புக்களாகவும் உருக்கொண்டு நிற்பதை அறிவீர்கள்... இவற்றில் எதற்காகவும் வேண்டி நீங்கள் உழைத்தது கிடையாது. இவற்றை வாங்க நீங்கள் எந்த ஒரு பைசா கூட செலவிட்டது கிடையாது. இவற்றின் அழகும் ஆரோக்கியமும் குன்றாமல் பராமரிக்க எந்த ஒரு முயற்சியும் உங்கள் தரப்பில் இருந்து பெரிதாக ஒன்றும் இல்லை.

இப்படிப்பட்ட ஒரு பெரும் பொக்கிஷம் உங்கள் கைவசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பை அளவிட அருகாமையில் உள்ள ஒரு மருத்துவமனையில் சென்று பணம் செலுத்தும் இடத்தில் (*cash counter*) சென்று நின்று பாருங்கள். சிறுநீரகம் பழுதான ஒரு நோயாளிக்கு இரத்தத்தை சுத்தீகரிக்க செய்யப்படும் டயாலிசிஸ் என்ற செயற்கை சிகிச்சைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 650 முதல் 1000 வரை வசூலிக்கப்படுவதை நீங்கள் காணலாம். சிறுநீரகம் அறவே செயலிழந்து போனவர்களுக்கு நீங்கள் உங்கள் சிறுநீரகத்தில் ஒன்றை விற்க முன்வந்தால் அதை 5 இலட்சம் ரூபாய்க்கும் மேல் கொடுத்து வாங்க வாடிக்கையாளர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உடலின் ஒரே ஒரு உறுப்பின் கதை. அப்படியென்றால் உங்கள் உடல் என்ற பொக்கி'ங்களின் தொகுப்பின் மொத்த மதிப்பையும் இதைப் பராமரிப்பதற்கான செலவையும் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

எத்தனை அரிய பொக்கிஷம் உங்களுக்கு தரப்பட்டு உங்கள் உழைப்பின்றியே பராமரிக்கப் பட்டு வருகிறது!

உங்கள் ஆடையை வடிவமைத்தது யார் என்று தெரியும். அந்த ஆடைக்கு அஸ்திவாரமான உங்கள் உடலை வடிவமைத்து வழங்கியது யார்? சிந்தித்திருக்கிறீர்களா?

ஆம், சந்தேகமின்றி அது இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் அந்த கருணையுள்ள இறைவனே. ஏனெனில் அவனைத் தவிர வேறு யாரும் இவ்வாறு கூறக் கேட்டு இருக்க வாய்ப்பில்லை:

அவன்தான் கர்ப்பக் கோளறைகளில் தான் நாடியபடி உங்களை உருவாக்குகின்றான் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறில்லை. அவன்

யாவரையும் மிகைத்தோனாகவும், விவேகம் மிக்கோனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 3:6)

உங்கள் மாதாக்களின் வயிறுகளிலிருந்து நீங்கள் ஒன்றுமே அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்களை அல்லாஹ் வெளிப்படுத்துகிறான் அன்றியும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் ~ நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு ~ அவனே அமைத்தான். (திருக்குர்ஆன் 16:78)

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

## ● இது எவ்வளவு நாட்களுக்காக வழங்கப்பட்டுள்ளது?

அதை நாம் யாரும் அறிய மாட்டோம். எப்போது நம்மிடம் இருந்து இது பறிபோகும் என்பதை இதைத் தந்தவன் மட்டுமே அறிவான்!

ஒவ்வோர் ஆத்மாவும் தான் செய்ததற்குத் தக்கபடி பிரதிபலன்கள் அளிக்கப்படும் பொருட்டு (நியாயத் தீர்ப்புக்குரிய) வேளை நிச்சயமாக வரவிருக்கிறது ஆயினும் அதை மறைத்து வைக்க நாடுகிறேன். (திருக்குர்ஆன் 20:15)

## ● இது எதற்காக தரப்பட்டுள்ளது?

இதற்கான உண்மையான விடையும் இதைத் தந்தவனிடமிருந்தே அறிய முடியும்.

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதாகவே இருக்கிறது பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம். பின்னர், நம்மிடமே நீங்கள் மீட்கப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 21:35.)

உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 67:2)

ஆம் சகோதரிகளே இதற்காகத்தான் இந்த அறிய பொக்கி'ம் நம்மிடம் தற்காலிகமாக தரப்பட்டுள்ளது. அதாவது இந்த வாழ்க்கை என்ற பரீட்சையில் நமது செயல்களும் நடவடிக்கைகளும் முழுமையாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அவை மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளின்போது பாவங்களாகவும் புண்ணியங்களாகவும் வெளிப்பட உள்ளன. அவற்றின் அடிப்படையில் மறுமையில் நமக்கு சொர்க்கமோ நரகமோ வாய்க்க உள்ளன என்பதே இந்த பொக்கிஷத்தை நமக்கு வழங்கியுள்ள இறைவனின் கூற்று!

எனவே இந்த அரிய பொக்கிஷத்தை முறைப்படி பாதுகாத்து இறைவன் நமக்குக் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களுக்கு ஏற்ப பேணி வந்தால் நாம் நாளை மறுமையில் சென்றடையும் இடம் சொர்க்கச் சோலையாக இருக்கும். மாறாக இதைத் தவறாக பயன்படுத்தினால் நாம் சென்றடையும் இடம் நரகத்தின் எரிகிடங்காக இருக்கும்.

இறைவனின் நமக்கு கற்பிக்கும் எவல்விலக்கல்கள் பலதரப்பட்டவை உள்ளன. அவற்றின் முயற்சிக்கு ஏற்ப அவற்றுக்கு இறைவனிடம் நற்கூலியும் உண்டு. இருந்தாலும் அவற்றில் ஒரு செயல் உண்டு. அது அதிகம் உழைப்பு தேவைப் படாதது. எளிமையாக யாரும் பேண முடியும். அதன் மூலம் புண்ணியங்களை நாம் சேர்க்க முடியும். ஆனால் அதைப்

பேணாதபட்சம் பாவங்கள் நம் கணக்கில் சேரவும் வாய்ப்பு உண்டு. அது என்ன?

ஆம் சகோதரிகளே, அதுதான்....

## ஆடை ஒழுக்கம்!

கீழ்கண்ட ஆடை வரம்புகள் இறைவனால் விதிக்கப்பட்டுள்ளன:

- ஆண்களுக்கு தொப்புள் முதல் முழங்கால் வரையிலான உடலின் பாகங்கள் மறைக்கப்படவேண்டியவையாகும்.
- பெண்களைப் பொறுத்தவரை முகம் மற்றும் முன்கை தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.
- உடலின் பாகங்களை வெளிப்படுத்தும் விதமான மெல்லிய ஆடைகளும் இறுக்கமான ஆடைகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தடை செய்யப்பட்டு உள்ளன.

## உங்களை நீங்களே பரிசோதித்துக் கொள்ளுங்கள்!

சகோதரிகளே, இப்போது உங்கள் ஆடை இறைவன் விதித்த வரம்புகளுக்கு உட்பட்டு உள்ளதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் அணிந்துள்ள ஆடை மேற்படி இறைவனின் வரம்புகளை மீறுகிறதா? அது மறைக்கப்பட வேண்டிய உடலின் பாகங்களை வெளிப்படுத்துகிறதா என்பதைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் ஆடைகளில் அமைந்துள்ள ஜன்னல்கள் அவை சிறிதாயினும் சரி பெரிதாயினும் சரி அவை உங்கள் உடல் அழகை அந்நிய ஆண்களின் கண்களுக்கு விருந்தாகப் படைக்கின்றன. ஆண்களின் கழுகுக் கண்களை அந்த ஜன்னல்கள் கவரும்போது அவர்களில் சிலர் அதை ஒரு விருந்துக்கான அழைப்பாக எடுத்துக் கொள்கின்றனர்.

இனிப்புக் கடைகளில் வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக அவை ஷோ கேஸ்களில் கவர்ச்சிகரமான வெளிச்சம் போட்டு வைக்கப் படுவதுபோல் உங்கள் அங்க அழகு அவர்களை ஈர்ப்பதற்காகப் பிரதர்சனம் செய்யப்படுகிறது என்பதாக அவர்கள் உணர்கிறார்கள். இந்த விருந்து அழைப்பு விபரீதமாக மாறுவதை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம். தேசிய குற்றப்பதிவு ஆணையத்தின் ***(National Crime Record bureau)*** கணக்குப்படி நாளொன்றுக்கு 93 பெண்கள் இந்தியாவில் கற்பழிக்கப் படுகிறார்கள்.

## உங்கள் உடலழகின் தாக்கம்

இவ்வாறு நீங்கள் உங்கள் உடலின் மறைக்கப் பட வேண்டிய பாகங்களை அந்நிய ஆண்களுக்கு காட்சிப்பொருளாக வைக்கும்போது பொது இடங்களில் பாலுணர்வு தூண்டப்படுகிறது. தொடர்ந்து சமூகத்தில் பல சீர்கேடுகள் நிகழ இச்செயல் ஏதுவாகின்றது. காதல், கள்ளக்காதல், விபச்சாரம், கற்பழிப்பு, அநியாயமாக அந்நியனின் கற்பம் சுமத்தல், பெற்று வளர்த்தவர்களுக்கு நன்றிகேடு, டென்‘ன், கருக்கொலை, சிசுக்கொலை, கொலை, குடும்ப அங்கத்தினர் மத்தியில் கலகம் போன்ற பலதும் இதைத் தொடருகின்றன.

● இவற்றைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளாமல் இருக்கக்கூடும்.

● என் உடல், என் உரிமை, என் விருப்பம் என் ஆடை... என்று நீங்கள் உரிமை கொண்டாடக்கூடும்.

● நாட்டு நடப்புதானே, குடும்ப வழக்கம்தானே என்று உங்கள் செயலுக்கு நியாயம் கற்பிக்கக் கூடும்.

● ஆபத்து வரும்போது சமாளிக்க எனக்குத் தெரியும், எனக்கு தற்காப்புக் கலை தெரியும், நான் படித்தவள், புத்திசாலி, எல்லாவற்றுக்கும் தீர்வு காண என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டவராகவும் நீங்கள் இருக்கக்கூடும்.

● அப்படியே நான் கற்பழிக்கப் பட்டாலும் அதற்கும் நாட்டில் தீர்வுகள் உண்டு, எல்லாவற்றையும் துடைத்தெறிந்துவிட்டு வாழ்க்கையைத் தொடர என்னால் முடியும் என்ற 'முற்போக்கு' சிந்தனை கொண்டவராகவும் நீங்கள் இருக்கக்கூடும்.

நீங்கள் எப்படிப்பட்ட பெண்மணியாக இருந்தாலும்......

## இதற்குத் தீர்வு உண்டா உங்களிடம்?

ஆனால் மரணம் என்ற ஒன்றை வெல்ல உங்களிடம் தீர்வுகள் எதுவும் இல்லை என்பதை மறந்துவிடாதீர்கள்!

மற்றவர்களைப்போல நீங்களும் மரணிப்பீர்கள்,

அன்று உங்கள் உடலைவிட்டு பிரிந்து விடுவீர்கள்,

அன்று உங்களை அழகிய பெயர் கொண்டு அழைக்க மாட்டார்கள்!

அனைவரும் 'இது இன்னாருடைய பிணம்!' என்றே கூறுவார்கள்!

அன்றோடு உங்கள் கதை முடிவதில்லை, ஆனால் அன்றுதான் நீண்ட பயணமே ஆரம்பமாகிறது!

மீண்டும் நீங்கள் உடலுக்குள் நுழையும்போது உங்களுக்கும் இவ்வுலகுக்கும் தொடர்பு இருக்காது. ஆம், மரணித்தவர்கள் பேசுவதில்லை என்பதை அறிவீர்களே!

## தொடர்வது மறுமை வாழ்க்கை....!

அங்கு உங்களுக்கு வழங்கப்பட்டிருந்த உடலையும், அழகையும், அருட்கொடைகளையும் பற்றிய இறைவனின் விசாரணைக்கு உட்படுத்தப் படுவீர்கள்.

உங்கள் மீதான குற்றச்சாட்டுகள் உங்களுக்கு எடுத்துக் காட்டப்படும்.

● "ஒரு மனிதர் இறுதி விசாரணை நாளில் தன்னுடைய ஆயுளை எப்படி கழித்தார்? என்றும், அவருக்கு கொடுக்கப்பட்ட கல்வியை எவ்வாறு பயன்படுத்தினார்? என்பதை பற்றியும், அவருக்கு கொடுக்கப்பட்ட செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தார்? எவ்வாறு செலவு செய்தார்? என்பதை பற்றியும் அவருக்கு கொடுக்கப்பட்ட உடலை எவ்வாறு பயன்படுத்தினார்? என்பதை பற்றியும் கேட்கப்படாத வரை ஒருவரின் பாதம் அது நின்ற இடத்தை விட்டு நகராது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(திர்மிதீ 2341)

## எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் ?

முதலில் இறைவனின் பூமியில் இறைவன் விதித்த வரம்புகளை மீறிய குற்றம். உங்களுக்கு விபரீதங்கள் நேர்ந்திருந்தாலும் சரி, ஒன்றுமே நேராதிருந்தாலும் சரி இறைவனின் வரம்புகளை மீறும் வண்ணம் உடையணிந்து வெளியில் சென்று வரும்போது அந்நிய ஆண்களின் பார்வை உங்கள் மீது பட்டிருந்தாலும் சரி, படாதிருந்தாலும் சரி, குற்றம் குற்றமே! உங்கள் பதிவு புத்தகத்தில் அது பாவமாகப் பதிவாகிறது.

தொடர்ந்து உங்கள் உடலழகை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்ததன் காரணமாக மேலே கூறப்பட்டவாறு சமூகத்தில் உண்டான அனைத்து குழப்பங்களுக்கும் பாதிப்புகளுக்கும் நீங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ துணைபோனதன் காரணமாக உண்டான பாவமும் உங்களுக்கு சேரும். ஒவ்வொருவரும் அவரவருக்குரியதை அடைந்தே தீருவார். இறுதித்தீர்ப்பு நாளின்போது அனைத்துமே வெளியாகும். வினை விதைத்தவன் வினையை அறுப்பான் என்பது அன்று நூறு சதவீத உண்மை!

எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவர் கண்டு கொள்வார். (திருக்குர்ஆன் 99:7,8)

விசாரணை என்பது எந்த அளவுக்கு முழுமையானது என்றால் இவ்வுலகில் கருக்கொலை அல்லது சிசுக்கொலைக்கு உள்ளான குழந்தையும் அன்று உயிர் கொடுக்கப்பட்டு அதுவும் கூட குற்றவாளிகளைக் காட்டிக் கொடுக்கும்.

உயிருடன் புதைக்கப்பட்ட (பெண்குழந்தையான)வளும் வினவப்படும் போது. எக்குற்றத்திற்காக கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது) (திருக்குர்ஆன் 82:8~9)

## உங்கள் உடல் உறுப்புகளும் தோல்களும் உங்களைக் காட்டிக் கொடுக்கும்.

● அச்சமயம் (பாவம் செய்த) அவர்களுக்கு விரோதமாக அவர்களுடைய செவிகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய (உடல்) தோல்களும் அவைகள் செய்தவைகளைப் பற்றி சாட்சி கூறும்.

அதற்கவர்கள், தங்கள் தோல்களை நோக்கி, 'எங்களுக்கு விரோதமாக நீங்கள் ஏன் சாட்சியம் கூறினீர்கள்?' என்று கேட்பார்கள். அதற்கு அவைகள், 'எல்லா பொருள்களையும் பேசும்படி செய்கின்ற அல்லாஹ்வே எங்களையும் பேசும்படி செய்தான். அவன்தான் உங்களை முதல் முறையாகவும் படைத்தான். (இறந்த) பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக் கின்றீர்கள்' என்றும் அவை கூறும்.

உங்களுடைய செவிகளும், உங்களுடைய கண்களும், உங்களுடைய தோல்களும் உங்களுக்கு எதிராக சாட்சியம் கூறாமல் இருக்க, நீங்கள் (உங்களுடைய பாவங்களை அவைகளுக்கு) மறைத்துக் கொள்ள முடியவில்லை. எனினும், நீங்கள் செய்பவைகளில் அதிகமானவற்றை அல்லாஹ் அறியவே மாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள். (திருக்குர்ஆன்41:20~ 22)

● அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம்அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும் அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும். (திருக்குர்ஆன் 36:65)

விசாரணைக்குப் பிறகு பாவிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் விதிக்கப்படும். அதுதான் மனிதனின் நிரந்தரமான அழியாத இருப்பிடம் ஆகும். அந்த நரகம் எப்படிப்பட்டது என்பதை விளங்க திருக்குர்ஆனைப் படியுங்கள். பல்வேறு இடங்களில் அதுபற்றி திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகிறான் உதாரணத்திற்கு கீழ்கண்ட வசனங்களைப் படியுங்கள்.

● நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது, வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும். (திருக்குர்ஆன் 78:21-30)

● .....அநியாயக்காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம் (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும். மிகக் கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும். ' (திருக்குர்ஆன் 18:29)

## கட்டுப்பாடுகள் உங்களின் நன்மைக்கே!

ஆம் சகோதரிகளே, மேற்கூறப்பட்டவை மனித வார்த்தைகளோ ஊகங்களோ அல்ல. இவ்வுலகைப் படைத்தவனின் மறுக்க முடியாத வார்த்தைகள். நாளை நடக்க இருப்பவற்றை இங்கேயே எச்சரிக்கிறான். சமூக நலன் கருதி அவன் நமக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளான். அவற்றைப் பேணி வாழ்ந்தால் இங்கு நமது தனி நபர் வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் அமைதி மிக்கதாக மாறும். அந்த கட்டுப்பாடுகளைப் பேணி வாழும்போது ஒரு சில மன இச்சைகளைத் தியாகம் செய்ய வேண்டி வரலாம். ஆனால் அவற்றுக்குப் பரிசாக நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கத்தை அல்லவா தயார் செய்து வைத்துள்ளான்.

சொர்க்கம் என்பது ஓர் சாந்தியும் சமாதனமுமான இருப்பிடம். அங்கு கவலை, தீமை, பகை, சோர்வு, நோய், முதுமை, பஞ்சம், போன்ற எதற்குமே இடம் இல்லை. திகட்டாத இன்பங்களில் ஊறித் திளைக்கும் இடம் அது.. தோட்டங்களும் பூங்காவனங்களும் மாசற்ற நீரூற்றுகளும் உயர் மாளிகைகளும் சுவைமிக்க கனிகளும் உணவுகளும் பானங்களும் அளவின்றி அனுபவிக்க இறைவன் ஏற்பாடு செய்த இடம்! என்றும் இளமையோடு இருக்கும் இடம்! காரணம் மரணம் என்பது இனி இல்லையல்லவா?

● விசுவாசிகளான ஆண்களுக்கும் விசுவாசிகளான பெண்களுக்கும் இறைவன் சுவனபதிகளை வாக்களித்துள்ளான் ~ அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள். (அந்த) நித்திய சுவனபதிகளில் அவர்களுக்கு உன்னத மாளிகைகள் உண்டு ~ இறைவனின் திருப்திதான் மிகப்பெரியது ~ அதுதான் மகத்தான வெற்றி. (திருக்குர்ஆன் 9:72)

ஆம் சகோதரிகளே, உங்கள் நன்மை நாடியே - உங்கள் இம்மை மற்றும் மறுமை நலன் நாடியே - இறைவன் உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ அழைக்கிறான். நீங்கள் புறக்கணிக்கலாமா?

மனிதனே! கொடையாளனான சங்கைமிக்க உன் இறைவனுக்கு மாறு செய்யும்படி உன்னை மருட்டி விட்டது எது? அவன்தான் உன்னைப்படைத்து, உன்னை ஒழுங்குபடுத்தி உன்னைச் செவ்வையாக்கினான். எந்த வடிவத்தில் அவன் விரும்பினானோ (அதில் உன் உறுப்புகளைப்) பொருத்தினான்.

(திருக்குர்ஆன் 82:6~ 8)

# சொர்க்கத்துக் காட்சிகள்

● பொன் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கும். இன்னும் அங்கு அவர்கள் மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அதிலுள்ளன. இன்னும், 'நீங்கள் இங்கு என்றென்றும் தங்கியிருப்பீர்கள்!' (என அவர்களிடம் சொல்லப்படும்.) (அல்~குர்ஆன் 43:71)

● 'சென்று போன நாட்களில் நீங்கள் முற்படுத்தி(யனுப்பி)ய (நல்ல அமல்களின்) காரணத்தால், நீங்கள் இப்போது மகிழ்வோடு புசியுங்கள் இன்னும் பருகுங்கள்' (என அவர்களுக்குக் கூறப்படும்). (அல்~குர்ஆன் 69:24)

● அ(த்தகைய)வர்களுக்கு என்றென்றும் தங்கியிருக்கக் கூடிய சுவனபதிகள் உண்டு. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு அங்கு பொன்னாலாகிய கடகங்கள் அணிவிக்கப் படும், ஸுன்துஸ், இஸ்தப்ரக் போன்ற பச்சை நிற பூம்பட்டாடைகளை அவர்கள் அணிந்திருப்பார்கள் அங்குள்ள உயர்ந்த ஆசனங்களின் மீது சாய்(ந்து மகிழ்)ந்து இருப்பார்கள் ~ (அவர்களுடைய) நற்கூலி மிகவும் பாக்கியமிக்கதாயிற்று. (அவர்கள்) இளைப்பாறுமிடமும் மிக அழகியதாற்று.

(அல்~குர்ஆன் 18:31)

● "அவர்கள் ஒருபோதும் நோய்வாய்ப்பட மாட்டார்கள், மூக்குச் சிந்தவோ எச்சில் துப்பவோ மாட்டார்கள்" என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி)

● சொர்க்கத்திலே ஒருவருக்கொருவர் வெறுப்போ , மனக்கசப்போ அடைய மாட்டார்கள். அவர்களுடைய இதயங்கள் ஒன்றுபோல இருக்கும். அவர்கள் இறைவனை காலையிலும், மாலையிலும் புகழ்ந்து கொண்டிருப்பார்கள். என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி)

● சொர்க்கத்தில் உள்ளவர்கள் அசுத்தங்களை எவ்வாறு வெளியாக்குவார்கள் என்று முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது: "அவர்களின் தோலின் வழியாக வியர்வை வெளியாகும் அது கஸ்தூரியின் வாசனையைப் போன்று இருக்கும். அனைவருடைய வயிறும் மெலிந்ததாக இருக்கும்" என்று கூறினார்கள் (இப்னு ஹப்பான்)

# பொருள் போதையால் அழிந்த நண்பன்!

இவ்வுலகில் செல்வம் என்பது முழுக்க முழுக்க இறைவனுக்கு சொந்தமானது. மனிதனின் உண்மை நிலையை பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும் எவரும் அது மனிதனிடம் தற்காலிகமாக வந்து செல்வது என்பதை உணர்வார்கள். செல்வம் என்பது இறைவனால் மனிதனுக்கு தற்காலிகமாக வழங்கப்படும் சோதனைப் பொருளாகும் என்பதை உணர்ந்த உண்மையான இறைவிசுவாசிகள் அவற்றை முறைப்படி கையாண்டு மறுமையில் சொர்க்கத்தைப் பெற முயற்சிப்பார்கள். ஆனால் இதை உணராத அறிவீனர்கள் இம்மையிலும் நிம்மதியை இழக்கிறார்கள். மறுமையிலும் நரக வேதனையை அடைகிறார்கள்.

அவ்வாறு தங்களுக்கு வழங்கப்பட்ட செல்வத்தைப் பற்றி இருவேறு கண்ணோட்டம் கொண்ட இரு நண்பர்களின் சரிதையைத் திருக்குர்ஆன் தனது பதினெட்டாம் அத்தியாயத்தில் கூறுகிறது.

18:32. (நபியே!) இரு மனிதர்களை அவர்களுக்கு உதாரணமாகவும் கூறுவீராக! அவ்விருவரில் ஒருவருக்கு நாம் திராட்சைத் தோட்டங்களில் இரண்டைக் கொடுத்தோம் இன்னும் பேரீத்த மரங்களைக் கொண்டு அவ்விரண்டையும் சூழப்பட்டவை ஆக்கினோம், அவ்விரண்டிற்கும் இடையில் (தானிய) விவசாயத்தையும் அமைத்தோம்.

18:33. அவ்விரு தோட்டங்களும் அவற்றின் பலன்களை ~ எப்பொருளையும் குறையாது கொடுத்துக் கொண்டிருந்தன. அவ்விரண்டிற்கும் நடுவே நாம் ஓர் ஆற்றையும் ஒலித்தோடச் செய்தோம்.

சற்று கற்பனை செய்து பாருங்கள்...

இரண்டு மிகப்பெரிய திராட்சைத் தோட்டங்கள்.. அவ்விரண்டையும் பேரீத்தமர தோட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெரும் தோட்டங்களின் நடுவே தானியங்களை உற்பத்தி செய்யும் வயல். இவற்றின் நடுவே சதா ஒலித்தோடிக் கொண்டிருக்கும் ஒரு ஆறு! அங்கு விளைச்சலுக்குப் பஞ்சமில்லை. இவற்றைப் பராமரிக்க ஏராளமான பணியாளர்கள். இவைபோக அவனுக்கு இன்னும் பல வருமானங்களும் இருந்தன.

அந்த இரு நண்பர்களில் ஒருவன் இப்படிப்பட்ட பெரும் செல்வந்தன். அவனுக்கு தன் செல்வம் சேரச்சேர, விளைச்சல்கள் வெகுவாக அதிகரிக்க அவனுக்கு செல்வச்செருக்கு என்ற போதை தலைக்கேறியது. மனித வாழ்வு என்பது தற்காலிகமானதே, விவசாயமும் விளைச்சலும் இறைவன் தருவதே, மரணமும் அதைத் தொடர்ந்து மறுமையும் வர உள்ளன, இறைவனிடம் தனக்கு வழங்கப்பட்ட செல்வம் பற்றி விசாரணை உள்ளது என்ற உண்மைகளையெல்லாம் அவனுக்கு ஷைத்தான் மறக்கடித்தான்.

தன்னிலை மறந்து தன் தோழனிடம் தன் செல்வநிலை பற்றி பெருமை பாராட்டினான் இவன்.

18:34. இன்னும் அவனுக்கு (வேறு) கனிகளும் இருந்தன் அப்பொழுது அவன் தன் தோழனிடம் விதண்டாவாதம் செய்தவனாக: "நான் உன்னை விடப் பொருளால்

அதிகமுள்ளவன், ஆட்களிலும் நான் (உன்னை) மிகைத்தவன்" என்று கூறினான்.

18:35. (பெருமையினால்) தன் ஆத்மாவுக்குத் தீங்கிழைத்தவனாக தன் தோட்டத்திற்குள் நுழைந்தான் அவன், "இந்த(த் தோட்டம்) எப்பொழுதாவது அழிந்துவிடும் என்று நான் எண்ணவில்லை" என்றும் கூறிக் கொண்டான்.

18:36. (நியாயத் தீர்ப்புக்குரிய) வேளை ஏற்படும் என்றும் நான் எண்ணவில்லை. (அப்படி ஏதும் நிகழ்ந்து) நான் என் இறைவனிடம் மீண்டும் கொண்டு செல்லப்படுவேனாயின், நிச்சயமாக இங்கிருப்பதைவிட மேலான இடத்தையே நான் காண்பேன்" என்றும் கூறினான்.

செல்வச்செருக்கு அவனை எப்படியெல்லாம் பிதற்ற வைக்கிறது பாருங்கள்! ஷைத்தானின் தாக்கம் அப்படிப்பட்டது. அவனது தோழனோ நேர் எதிரான கருத்தைக் கொண்டிருந்தான். அவனது உண்மை நிலை பற்றியும் இவற்றின் பின்னணியில் அனைத்துக்கும் காரணமாக இருக்கும் இறைவனைப் பற்றியும் நினைவூட்டினான்:

18:37. அவனுடைய தோழன் அவனுடன் (இது பற்றித்) தர்க்கித்தவனாக: "உன்னை மண்ணிலிருந்தும், பின் ஒரு துளி இந்திரியத்திலிருந்தும் படைத்து, பின்பு உன்னைச் சரியான மனிதனாக ஆக்கினானே அவனையா நீ நிராகரிக்கின்றாய்?" என்று அவனிடம் கேட்டான்.

18:38. "ஆனால், (நான் உறுதி சொல்கிறேன்:) அல்லாஹ் ~ அவன்தான் என் இறைவனாவான் என் இறைவனுக்கு நான் யாரையும் இணை வைக்கவும் மாட்டேன்"

செல்வச்செருக்கு எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்யத் தூண்டுகிறது! நேற்றுவரை ஒன்றுமே இல்லாமல் இருந்து, பின்னர் ஒரு அற்பமான இந்திரியத் துளியில் இருந்து படிப்படியாக வளர்த்து மனிதனாக உருவாக்கி அவனுக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்துப் பரிபாலித்து வருபவனை மறுத்து, தன் செல்வமே எல்லாம் அதுவே கடவுள் என்று வழிபடும் நிலைக்கு மனிதனைக் கொண்டு செல்கிறது. படைத்த இறைவனுக்கு பதிலாக மற்றவர்களையோ, உயிரற்ற உணர்வற்ற பொருட்களையோ வணங்குவதே இணைவைத்தல் என்று அறியப்படுகிறது. இப்பாவத்தை இறைவன் மன்னிக்காத பாவம் என்றும் இதைச் செய்பவர்களுக்கு மறுமையில் தண்டனை நிரந்தர நரகம் என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.

18:39. "மேலும், நீ உன் தோட்டத்தில் நுழைந்தபோது "மாஷா அல்லாஹ் லா குவ்வத்த இல்லா பில்லாஹ்" - அல்லாஹ் நாடியதே நடக்கும் அனைத்து சக்தியும் அல்லாஹ்வுக்கேயன்றி வேறில்லை ~ என்று நீ கூறியிருக்க வேண்டாமா? செல்வத்திலும், பிள்ளையிலும் நான் உன்னைவிடக் குறைந்தவனாக இருப்பதாய் நீ கண்ட போதிலும் ~

18:40. "உன்னுடைய தோட்டத்தைவிட மேலானதை என் இறைவன் எனக்குத் தரவும் (உன் தோட்டத்தின் மீது) வானத்திலிருந்தும் இடிகளை அனுப்பி அதை அதனால் மழுமட்டையான திடலாக ஆக்கி விடவும் போதும்.

18:41. "அல்லது அதன் நீர் முழுதும் உறிஞ்சப்பட்டதாகி ~ அதை நீ தேடிக்கண்டு பிடிக்க முடியாதபடியும் ஆகிவிடலாம்" என்று கூறினான்.

அறிவும் விவேகமும் நண்பனின் அறிவார்ந்த வார்த்தைகள் அவனைத் திருத்தவில்லை. இறுமாப்பு அவனை சுயநினைவுக்கு மீளாமல் தடுத்தது!

நண்பனின் கூற்று போல இறைவன் அந்த அகங்காரிக்கு வழங்கியவற்றைப் பின்வாங்கிக் கொள்ள தீர்மானித்தான் போலும்! அவனுக்குத்தான் அது எளிதாயிற்றே. அவனைப் பொறுத்தவை 'ஆகுக' என்று கட்டளையிட்டால் எக்காரியமும் ஆகிவிடுமே!

18:42. அவனுடைய விளைபொருட்கள் அழிக்கப்பட்டன. அதற்காக தான் செலவு செய்ததைக் குறித்து (வருந்தியவனாக) இரு கைகளையும் பிசைந்து கொண்டிருந்தான். அ(த்தோட்டமான)து வேரோடு சாய்ந்து கிடக்கின்றது. (இதனைப் பார்த்த) அவன் "என் இறைவனுக்கு எவரையும் நான் இணை வைக்காமல் இருந்திருக்க வேண்டுமே!" என்று கூறினான்.

18:43. மேலும், அல்லாஹ்வையன்றி, அவனுக்கு உதவி செய்யும் கூட்டத்தார் எவரும் அவனுக்கு இருக்கவில்லை ஆகவே, அவன் (இவ்வுலகில்) எவராலும் உதவி செய்யப்பட்டவனாக இல்லை.

18:44. அங்கே உதவிசெய்தல் உண்மையான அல்லாஹ்வுக்கே உரியது, அவன் கூலி வழங்குவதிலும் மிக்க சிறந்தவன் முடிவெடுப்பதிலும் மிக்க மேலானவன்.

இந்த இரு நண்பர்களின் சரிதையைக் கூறிய இறைவன் தொடர்ந்து வாழ்வின் உண்மை நிலையைப் பற்றி சிந்திக்க அழைக்கிறான்:

18:45. மேலும், இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம், அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! "அது நாம் வானத்திலிருந்து இறக்கி வைத்த நீரைப் போலிருக்கிறத் பூமியிலுள்ள தாவரங்கள் அதனுடன் கலந்(து செழித்)தன் ஆனால் அவை காய்ந்து, பதராகி அவற்றைக் காற்று அடித்துக் கொண்டு போய் விடுகிறது ~ மேலும், எல்லாப் பொருளின் மீதும் அல்லாஹ் ஆற்றலுடையவனாக இருக்கின்றான்.

18:46. செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்கருமங்களே உம்முடைய இறைவனிடத்தில் நன்மைப் பலனுடையவையாகவும், (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன.


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

KGF: பஷீர் அஹ்மத் 9845217262 ஓசூர்: ர.ஃபீக் - 9994713191
தர்மபுரி: அய்யூப் 9842627171 கோவை: ஜுல்.ஃபிகர்-8015714648
மதுரை: ஆதில்- 9043967747 திருப்பூர் : ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி: முஸ்த.ஃபா -9865446344 குன்னூர்: அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் .ஃபிர்தௌசி- 9944656942
அப்துல்லாஹ் .ஃபிர்தௌசி- 9894442844 சேலம்: இப்ராஹீம் -9994091364
கும்பகோணம்: அப்துல்சலாம் -9597285160 ஈரோடு: ஷேக் தாவுத் -7373947869
விழுப்புரம்:அப்துல் கனி - 9790290002 திருநெல்வேலி: ரி.ஃபாயி - 9840911985

# உடல்நலம் பேணுதல் மார்க்கக் கடமை

## மறுமையில் கேள்வி கேட்கப்படும்

ஒருவர் தனக்கு கொடுத்த ஆரோக்கியத்தை சரியாக பயன்படுத்தாமல், அதை நாசமாக்கினால் மறுமையில் அதற்கும் விசாரணை உண்டு என்று நபிகள் நாயகம் ஸல் அவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

● "ஒரு மனிதர் இறுதி விசாரணை நாளில் தன்னுடைய ஆயுளை எப்படி கழித்தார்? என்றும், அவருக்கு கொடுக்கப்பட்ட கல்வியை எவ்வாறு பயன்படுத்தினார்? என்பதை பற்றியும், அவருக்கு கொடுக்கப்பட்ட செல்வத்தை எவ்வாறு சம்பாதித்தார்? எவ்வாறு செலவு செய்தார்? என்பதை பற்றியும் அவருக்கு கொடுக்கப்பட்ட உடலை எவ்வாறு பயன்படுத்தினார்? என்பதை பற்றியும் கேட்கப்படாத வரை ஒருவரின் பாதம் நகராது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(திர்மிதீ 2341)*

## ஆரோக்கியத்தை கேட்டுப் பிரார்த்திக்க வேண்டும்

அது மட்டுமில்லாமல் ஒருவர் தன்னுடைய ஆரோக்கியத்திற்காக இறைவனிடம் பிரார்ததனையும் செய்ய வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

● ஒரு முறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களில் ஒருவரை உடல்நலம் விசாரிப்பதற்காகச் சென்றார்கள். அவர் கோழிக் குஞ்சைப் போன்று நலிந்து பலவீனத்துடன் காணப்பட்டார். அவரிடம் நபி(ஸல்) அவர்கள், "நீ ஏதேனும் பிரார்த்தித்து வந்தாயா? அல்லது இறைவனிடம் ஏதேனும் வேண்டி வந்தாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர் "ஆம் நான், இறைவா! நீ மறுமையில் அளிக்கவிருக்கும் தண்டனையை முன்கூட்டி இவ்வுலகிலேயே எனக்குத் தந்துவிடு என்று பிரார்த்தித்து வந்தேன்" என்று கூறினார்.

அதைக்கேட்டு நபி(ஸல்) அவர்கள் (வியப்புடன்) "இறைவன் தூயவன் (சுப்ஹானல்லாஹ்!) "உன்னால் அதைத் தாங்க முடியாது". அல்லது "உன்னால் அதற்கு இயலாது" என்று கூறிவிட்டு, நீ "இறைவா! இம்மையிலும் எமக்கு நன்மையை வழங்குவாயாக! மறுமையிலும் எமக்கு நன்மையை வழங்குவாயாக! நரக வேதனையிருந்து எம்மைக் காப்பாயாக!""" என்று பிரார்த்தித்திருக்கக் கூடாதா? என்று கேட்டார்கள்.

பிறகு அவருக்காக இறைவனிடம் பிரார்த்தித்தார்கள் அவருக்கு இறைவன் நிவாரணத்தை வழங்கினான்.

*(நூல் :முஸ்லிம் 5216)*

அப்போது நபி (ஸல்) அவர்கள் நீர் இறைவனிடம் ஆரோக்கியத்தை கேட்டு பிரார்த்தனை செய்யக்கூடாதா? என்று கேட்டார்கள் என்று திர்மிதீயின் *(2409)* அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது.

இதை ஏதோ ஒரு தடவை இரண்டு தடவை இப்படி வலியுறுத்திப்பார்கள் என்று நினைத்து விடக்கூடாது நபி ஸல் அவர்கள் பல்வேறு கால கட்டங்களில் இதை வலியுறுத்திச் சென்றுள்ளார்கள்.

● “நீங்கள் (லா இலாஹ இல்லல்லாஹ் என்ற) ஏகத்துவ வாசகத்திற்குப் பிறகு ஆரோக்கியத்தைத்தவிர வேறு எந்த (சிறந்ததையும்) உங்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே நீங்கள் இறைவனிடம் ஆரோக்கியத்தை கேளுங்கள்” என்று நபி ஸல் அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் என்று அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நூல்: அஹ்மத் (10)

● ஒருவர் புதிதாக இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினால், அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகையைக் கற்றுக்கொடுப்பார்கள். பிறகு ”அல்லாஹும்ம ம.்.க்பிர் லீ வர்ஹம்னீ வஹ்தினீ வ ஆ.்.பினீ வர்ஸுக்னீ“ எனும் இந்த வாக்கியங்களைச் சொல்லி பிரார்த்திக்கும்படி கட்டளையிடுவார்கள்.

(பொருள்: இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்குக் கருணை புரிவாயாக! என்னை நல்வழியில் செலுத்து வாயாக! எனக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! எனக்கு வாழ்வாதாரத்தை வழங்குவாயாக!)

அறிவிப்பவர் : தாரிக் பின் அஷ்யம் (ரலி), நூல் :முஸ்லிம் (5228)

● மக்களுக்கு கட்டளையிட்டது மட்மில்லாமல நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் ஆரோக்கியத்தை கேட்டுள்ளார்கள்.

”அல்லாஹும்ம! இன்னீ அஊது பிக்க மின் ஸவாலி நிஅமத்திக்க, வ தஹவ்வுலி ஆ.்.பியத்திக்க, வ .்.புஜாஅத்தி நிக்மத்திக்க, வ ஜமீஇ சகத்திக்க“ என்பது நபி(ஸல்) அவர்களின் பிரார்த்தனைகளில் ஒன்றாக இருந்தது.

(பொருள்: இறைவா! உன் அருட்கொடைகள் (முற்றாக) நீங்குவதிருந்தும், நீ வழங்கிய ஆரோக்கியம், (நோய், வறுமை போன்ற தீங்குகளாக) மாறி விடுவதிலிருந்தும், உனது தண்டனை திடீரென வருவதிருந்தும், உனது கோபத்திற்கு உள்ளாக்கும் அனைத்து அம்சங்களிருந்தும் உன் னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்.)

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), நூல் :முஸ்லிம் (5289)

இந்த நபிமொழிகள் மூலம் இஸ்லாம் ஆரோக்கியத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளலாம்.

# பொய் பேசுவது பாவமே!

**குழந்தைகளிடம் பொய் சொல்வது: -**

● அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: - “யாரேனும் ஒரு குழந்தையிடம் இங்கே வந்து இதை எடுத்துக்கொள் என்று கூறிவிட்டு அந்தக் குழந்தைக்கு ஒன்றும் தராவிட்டால், அது பொய் பேசியதாக கணக்கிடப்படும்”, என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: அபூதாவூத் மற்றும் ஸஹீஹ் அல் ஜாமிவு

**மக்களை சிரிக்க வைப்பதற்காக பொய் பேசுவது: -**

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: - “மக்களை சிரிக்க வைப்பதற்காக பேசி, பொய் சொல்பவனுக்கு கேடு உண்டாகட்டும், கேடு உண்டாகட்டும், கேடு உண்டாகட்டும், என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: முஆவியா இப்னு மாதா, ஆதாரம் (திர்மிதி, அபூதாவூத்)

# ஆரோக்கியம் பேணும் வழிகள்

ஆரோக்கியத்தை வலியுறுத்தியது மட்டுமில்லாமல் ஆரோக்கியத்தை பேண வழிமுறைகளையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு சொல்லி தந்துள்ளார்கள். நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால் நாமும் நம்மை சுற்றி இருப்பவைகளும் சுத்தமாகவும். சுகதாரமாகவும் இருக்க வேண்டும்.

## ஆடை சுத்தம்

நம்மை சுற்றி இருப்பவைகளில் மிக முக்கியமானது நமது ஆடையாகும். நமது ஆடையையும் சுத்தமாகவும்,அழகாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

● உமது ஆடைகளைத் தூய்மைப் படுத்துவீராக! (அல்குர்ஆன் 74:4)

● நபி (ஸல்) அவர்கள் தலை வாராதவராக, முடிகள் குலைந்த நிலையில் ஒரு மனிதரைப்பார்த்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் இவர் தன்னுடைய முடியை வாரிக்கொள்தற்கு எதையும் பெற்றுக்கொள்ள வில்லையா? என்று கேட்டார்கள். மற்றொருவரின் ஆடை அழுக்கானதாக பார்த்தார்கள். உடனே இவர் தன்னுடைய ஆடையை கழுவிக் கொள்வதற்கு தண்ணீரை பெற்றுக் கொள்ளவில்லையா? என்று கேட்டார்கள். நூல்: அபூதாவூத் (3540)

## சுற்றுப்புறச்சூழல் சுத்தம்

அடுத்து நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டியவைகளில் நம்முடைய வீடும் நம்மை சுற்றி இருக்கும் தெருக்களும்தான். பாதைகளில் மலம், ஜலம் கழிப்பதை நபிகள் நாயகம் ஸல் அவர்கள் வன்மையாக எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

● “சாபத்திற்குரிய இரண்டு காரியங்களை தவிர்ந்து கொள்ளுங்கள்” என்று நபி ஸல் அவர்கள் கூறும்போது “சாபத்திற்குரிய இரண்டு செயல்கள் யாவை?” என்று நபித்தோழர்கள் கேட்டார்கள். அதற்கு பாதைகளில் மலம் கழிப்பதும். அல்லது அவர்களின் (ஓய்விடங்களான) நிழல்களில் மலம் கழிப்பதுதான்“ என்று நபி ஸல் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம் (448)

## பல் துலக்குவது

அடுத்து நாம் சுத்தமாக வைத்திருப்பவைகளில் மிகவும் முக்கியமானது நம்முடைய பல்லாகும்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

”என் சமுதாயத்திற்கு“ அல்லது ”மக்களுக்கு“ நான் சிரமத்தை ஏற்படுத்திவிடுவேனோ என்று (அச்சம்) இல்லையாயின் ஒவ்வொரு தொழுகைக்கும் பல் துலக்க வேண்டுமென நான் அவர்களுக்கு கட்டளை பிறப்பித்திருப்பேன்.” நூல்: புகாரி (887)

## கைகளைக் கழுவுதல்

அடுத்து நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டியகைளில் ஒன்று நமது கைகளாகும். குறிப்பாக நாம் சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் கையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## நீர் நிலைகளைப் பேணுதல்

அடுத்து குளிக்கும் இடங்கள், குளிக்கும் தண்ணீர் இவைகளும் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமாகவும் வைத்திருக்க வேண்டும்.

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஓடாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் உங்களில் எவரும் சிறுநீர் கழிக்கவும் வேண்டாம் பின்னர் அதில் குடிக்கவும் வேண்டாம்.” நூல்: புகாரி (239)

## உணவு, நீர் இவற்றைப் பாதுகாத்தல்

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(உறங்கச் செல்கையில்) உனது விளக்கை அணைத்து விடு. (அப்போதும்) அல்லாஹ்வின் பெயரைச் சொல். உன் தண்ணீர்ப் பையைச் சுருக்கிட்டு மூடி விடு. (அப்போதும்) அல்லாஹ்வின் பெயரைச் சொல். உனது பாத்திரத்தை மூடிவை. (அதை முழுவதும் மூட இயலா விட்டாலும்) அதன் மீது எதையாவது குறுக்காக வைத்தேனும் மூடிவிடு. (அப்போதும்) அல்லாஹ்வின் பெயரைச் சொல்.

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி) நூல்: புகாரி (3280)

பொதுவாக இரவு நேரங்களில் பூச்சிகள் நடமாட்டம் இருக்கும். அந்த நேரத்தில் தண்ணீர் பாத்திரத்தில் விழுந்து விடக்கூடாது. எனவே பாத்திரத்தை மூடி வைக்க நபிகளார் கட்டளையிட்டுள்ளார்கள்.

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் (எதையும்) பருகும்போது பாத்திரத்திற்குள் மூச்சுவிட வேண்டாம் கழிப்பிடம் சென்றால் பிறவி உறுப்பை வலக்கரத்தால் தொட வேண்டாம் வலக்கரத்தால் சுத்தம் செய்ய வேண்டாம்.

அறிவிப்பவர் : அபூகத்தாதா (ரலி), நூல்: புகாரி (153)

மோசமான விலங்குகள் வாய் வைத்த பாத்திரத்தையும் நன்றாக கழுவி பயன்படுத்தவேண்டும்.

● உங்களில் ஒருவருடைய பாத்திரத்தில் நாய் குடித்துவிடுமானால் அவர் (அசுத்தமாகிவிட்ட) அந்தப் பாத்திரத்தை ஏழு முறை கழுவட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல் :புகாரி (172)

# வாசகர் எண்ணம்

● சென்ற மாத இதழை நண்பரிடம் கண்டேன். காலத்திற்குத் தேவையான செய்திகள் பல கண்டேன். தொடர்ந்து வாசிக்க விரும்புகிறேன்.

- எம்.எஸ். அப்துல் கரீம், ஈரோடு

● மாஷா அல்லாஹ், ஜூன் மாத இதழ் கட்டுரைகள் மற்றும் அட்டைப்படம் மிக அருமையாக இருந்தன. - எம். சு்ஹல் அஹமது, பேர்ணாம்பட்டு

● மாஷா அல்லாஹ், உங்கள் மலர் படித்தேன். அருமை. தொடர்ந்து படிக்க ஆசை - எம். உத்தமன், தென்காசி

● நான் ஒரு கிறிஸ்துவன், உங்கள் இதழை வாசித்து மகிழ்ந்தேன். தொடர்ந்து பெற ஆவல்.

- அமல்ராஜ் (sms மூலம்)

# நபிகளாரின் கூட்டிய முதல் பொதுக்கூட்டம்

தனது நாற்பதாவது வயதில் இறைவனின் தூதராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் போதனைகளை மக்கா நகரில் இரகசியமாகவே போதித்து வந்தார்கள். அந்த அளவுக்கு மக்கள் சிலை வழிபாட்டிலும் மூடநம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்தனர். பிறகு "நீங்கள் உங்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுங்கள்." (அல்குர்ஆன் *26:214*) என்ற வசனம் இறங்கிய பின் நபிகளார் அதற்குத் தயாரானார்கள்.

இறை மார்க்கத்தை எடுத்துரைப்பதற்காக ஸ.்.பா என்ற மலையின் உச்சியில் ஏறி நின்றுகொண்டு "யா ஸபாஹா! யா ஸபாஹா!!" என்று சப்தமிட்டார்கள். (பெரும் படையொன்று சூழ்ந்துகொண்டதை அல்லது ஏதேனும் பேராபத்து வந்துவிட்டதை அறிவிக்க இந்த வார்த்தையை பயன்படுத்தப்படுத்துவது அன்றைய வழக்கம்)

பிறகு குறைஷி வமிசத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் அழைத்தார்கள்: ்.பஹ்ர் குடும்பத்தாரே! அதீ குடும்பத்தாரே! அப்து முனா.்.பின் குடும்பத்தாரே! அப்துல் முத்தலிபின் குடும்பத்தாரே! என்று அழைத்தார்கள்.

அவர்களது அழைப்பைச் செவியேற்று இவ்வாறு அழைப்பவர் யார்? என வினவ சிலர் "முஹம்மது" என்று கூறினர். உடனே குறைஷியர்களில், அபூலஹப் மற்றும் பலரும் அங்கு குழுமினர். வர இயலாதவர்கள் தங்கள் சார்பாக ஒருவரை அவர் சொல்வதைக் கேட்டு வருமாறு கூறியனுப்பினார்கள்.

அனைவரும் ஒன்று கூடியபோது நபி (ஸல்) "இம்மலைக்குப் பின்னாலுள்ள கணவாயில் உங்களைத் தாக்குவதற்காக குதிரை வீரர்கள் காத்திருக்கிறார்கள் என்று நான் கூறினால் நீங்கள் நம்புவீர்களா?" என்று கேட்டார்கள்.

அதற்கு அம்மக்கள் "ஆம்! உங்களை நம்புவோம் உங்களை உண்மையாளராகவே கண்டிருக்கிறோம் பொய்யுரைத்துக் கண்டதில்லை" என்றனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் "மிகக் கடுமையான வேதனை வருமுன் நான் உங்களை அச்சமூட்டி எச்சரிக்கிறேன். எனக்கும் உங்களுக்கும் உள்ள உதாரணம், ஒருவர் எதிரிகளைப் பார்த்து அவர்கள் தன்னை முந்திச் சென்று தனது கூட்டத்தினரைத் திடீரெனத் தாக்கிவிடக் கூடாது என்பதற்காக மலை உச்சியில் ஏறி "யா ஸபாஹா!" என்று அழைத்தவரைப் போன்றாவேன்." என்றார்கள்.

பிறகு, நபி (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு ஏக இறைவழிபாட்டுக்கு - அதாவது சிலைகளையும் படைப்பினங்களையும் விட்டுவிட்டு படைத்தவனை வணங்குவதற்கு - அழைத்தார்கள். தான் இறைவனின் தூதர் என்பதையும் மறுமை வாழ்வு பற்றியும் சொர்க்கம் நரகம் பற்றியும் எச்சரித்தார்கள். சத்தியத்தை ஏற்று வாழ அழைப்பு விடுத்தார்கள். ஒவ்வொரு கூட்டத்தாரின் பெயர்களைத் தனித்தனியாகவும், பொதுவாகவும் குறிப்பிட்டுக் கூறினார்கள்.

"குறைஷியரே! அல்லாஹ்விடமிருந்து உங்களது ஆன்மாக்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள். உங்களை நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக, நான் உங்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து எந்தவொரு நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பாக முடியாது. அல்லாஹ்வைத் தவிர்த்து உங்களுக்கு நான் எந்த பலனும் அளிக்க முடியாது. (அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

ஒவ்வொரு கிளையாரின் பெயர்களையும் சொல்லி அழைத்து "உங்களை நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக நான் உங்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து எந்தவொரு நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பாக முடியாது." என்று ஒவ்வொரு கிளையார்க்கும் சொன்னார்கள்.

தொடர்ந்து தன் சிறிய தந்தையான அப்பாஸ், மாமியான ஸ∴பிய்யா இவர்களை அழைத்து இவ்வாறே சொன்னார்கள் . இறுதியாக அல்லாஹ்வின் தூதர் "முஹம்மதின் மகள் ∴பாத்திமாவே! எனது செல்வத்திலிருந்து விரும்பியதை கேட்டு பெற்றுக்கொள். உங்களை நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்! நிச்சயமாக நான் உங்களது நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பாக முடியாது. அல்லாஹ்வை விட்டு உங்களுக்கு நான் எந்த பலனும் அளிக்க முடியாது." என்றார்கள்

எனினும், மக்களே! உங்களுடன் இரத்த பந்தம் எனும் உறவு இருக்கிறது. உரிய முறையில் இரத்தப் பந்தத்திற்கானக் கடமைகளை நிறைவேற்றுவேன்" என்று கூறி முடித்தார்கள்.

இந்த எச்சரிக்கை முடிந்ததும் மக்கள் எதுவும் கூறாமல் கலைந்து சென்றார்கள். ஆனால் குறைஷித் தலைவர்களின் ஒருவனான அபூ லஹப் மட்டும் குரோதத்துடன் நபி (ஸல்) அவர்களை எதிர்கொண்டான். "நாள் முழுவதும் உனக்கு நாசமுண்டாகட்டும்! இதற்காகத்தான் எங்களைக் கூட்டினாயா?" என்று கூறினான். நபிகளார் மீது மண்ணை வாரி வீசினான் .

அவனைக் கண்டித்து "அழியட்டும் அபூ லஹபின் இரு கரங்கள் அவனும் அழியட்டும்..." என்ற 111வது அல்குர்ஆன் அத்தியாயம் இறங்கியது. (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஜாமிவுத்திர்மிதி, ∴பத்ஹுல் பாரி)

இவ்வாறாக ஏகத்துவக் குரல் ஓங்கியது. நபி (ஸல்) தங்களது நெருங்கிய உறவினர்களிடம் நீங்கள் இத்தூதுத்துவத்தை (நான் அல்லாஹ்வின் தூதர் என்பதை) ஏற்றால்தான் நம்மிடையே உறவு நீடிக்கும். இதைத்தவிர அரபுகள் கொண்டிருக்கும் குடும்ப உறவுகளெல்லாம் அல்லாஹ்வின் எச்சரிக்கையின் முன்னால் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும் என்று கூறித் தங்களது நிலையை மிகத் தெளிவாக அறிவித்துவிட்டார்கள்.

இவ்வாறே அழைப்புப் பணியின் குரல் மக்காவின் நாலாதிசைகளிலும் எதிரொலித்தது. இன்று உலகெங்கும் வியாபித்து நிற்கும் இந்த சத்திய மார்க்கத்தின் ஆரம்பம் இவ்வாறுதான் தொடங்கியது!

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, #8, 4th cross, 2nd main, LB Sastri nagar, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173



# நூற்றாண்டுகளாகியும் அழியாத வேதம்!

**முஹம்மது நபி காலத்தில் கையால் எழுதப்பட்ட உலகின் பழம்பெரும் குர்ஆன் கிடைத்தது (தகவல்: BBC மற்றும் மாலைமலர்) லண்டன், ஜூலை 22-**

இன்று கிடைக்கும் குர்ஆன் பிரதிகளோடு இதை ஒப்பிட்டுப்பார்த்தால் மூலவசனங்கள் அருளப்பட்ட நாள் முதல் இன்றுவரை வருடங்கள் 1430 ஆகியும் அட்சரம்பிசகாமல் அப்படியே பாதுகாக்கப் படுவதை நீங்கள் காணலாம்.

**இது எப்படி?**

முஹம்மது நபியவர்கள் 40-ஆவது வயதில் இறைத்தூதராக ஆனது முதல் 63-ஆவது வயதில் மரணமடையும் வரை அவருக்கு அவ்வப்போது சிறிது சிறிதாக ஒலிவடிவில் அருளப்பட்ட வசனங்களின் தொகுப்பே திருக்குர்ஆன் என்பதை அறிவீர்கள்.

இறைவன் புறத்திலிருந்து வானவர் ஜிப்ரீல் இவ்வசனங்களை கொண்டு வந்து நபிகளாருக்கு ஓதிக் காட்டுவார்கள். நபிகளாரோ எழுதவோ படிக்கவோ அறியாதவர், தனக்கு முன் ஓதப்படும் வசனங்களை மனப்பாடம் செய்து கொள்வார் நபிகளார். அது இறைவனுடைய ஏற்பாடு. தொடர்ந்து ஜிப்ரீலிடம் தான் செவியுற்ற வசனங்களை தனது தோழர்கள் முன் ஓதிக் காட்டுவார்கள். அவற்றை தோல்களிலும் எலும்புகளிலும் எழுதி வைத்துக் கொண்டனர் நபித்தோழர்கள். அது மட்டுமல்ல அவ்வசனங்களின் கவர்ச்சியில் தங்களைப் பறிகொடுத்த தோழர்கள் அவற்றை தொழுகையிலும் தொழுகைக்கு வெளியேயும் அடிக்கடி ஓதும் பழக்கமுடையோரானார்கள். அதாவது ஒலி வடிவிலேயே திருக்குர்ஆன் வசனங்கள் பிரபலமாகின. புண்ணியம் கருதியும் தொடர்ந்த ஓதலின் காரணமாகவும் பலரும் குர்ஆன் வசனங்களை மனப்பாடம் செய்தனர். குர்ஆன் என்ற வார்த்தையின் பொருளே ‘ஓதப்படுவது’ என்பதே!

ஆம், அருளப்பட்ட நாள் முதல் இன்று வரை திருக்குர்ஆனை அதிகமதிகமாக ஓதிவருவது உலகெங்கும் முஸ்லிம்களின் பழக்கமாக உள்ளது.

உலகிலேயே மிக மிக அதிகமாக மூல மொழியில் ஓதப்பட்ட மற்றும் ஓதப்படும் நூல் திருக்குர்ஆன் மட்டுமே! குறிப்பாக ரமலான் மாதம் பகலில் விரதமிருந்து இரவில் நின்று தொழுவது இஸ்லாமிய கடமை என்பதை கேட்டிருப்பீர்கள். இரவில் நீண்ட நேர தொழுகைகளில் இமாமாக நிற்பவர் 30 நாட்களில் முழு குர்ஆனையும் ஓதி முடிப்பது வழக்கம். அந்த அளவுக்கு இமாம்கள் முழு குர்ஆனையும் மனப்பாடம் செய்திருப்பார்கள். அவ்வாறு முழு குர்ஆனையும் மனப்பாடம் செய்தவர்கள் ஆயிரக்கணக்கில் அன்றும் இருந்தார்கள். இலட்சக் கணக்கில் இன்றும் இருக்கிறார்கள். கோடிக் கணக்கில் நாளையும் இருப்பார்கள், (இன்ஷாஅல்லாஹ்)! இவ்வாறு முழு குர்ஆனும் ஒலி வடிவில் உலகெங்கும் உலா வருகிறது. மனித மனங்களிலேயே பாதுகாக்கவும் படுகிறது. இதைப் பற்றி இறைவனும் குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

“நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம்” (திருக்குர்ஆன் 15:9)

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNE/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, MYSORE ROAD, BANGALORE 560026 on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4.
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

# சொர்க்கத்துக்கு உவமனம் ஏதுமில்லை

- அன்றியும், (அங்கு) நீர் பார்த்தீராயின், இன்ப பாக்கியங்களையும், மாபெரும் அரசாங்கத்தையும் அங்கு காண்பீர். (அல்-குர்ஆன் 76:20)
- அவர்கள் செய்த (நற்) கருமங்களுக்குக் கூலியாக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண் குளிர்ச்சியை (மறுமையின் பேரின்பத்தை) எந்த ஓர் ஆன்மாவும் அறிந்து கொள்ள முடியாது. (அல்-குர்ஆன் 32:17)
- சொர்க்கத்தின் வீடுகளைப்பற்றி முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது "தங்கம், வெள்ளியிலான செங்கல், கஸ்தூரியின் கலவை, முத்து பவளங்களின் கற்கள், குங்குமபூவின் மணல்... அதில் உள்ளே நுழைபவர் சந்தோஷத்தை தவிர வேறு எதுவும் அடையமாட்டார். இறப்பு என்பதே கிடையாது. அவர்களுடைய ஆடைகள் கிழிந்து போகாது எப்போதும் இளமையுடன் இருப்பார்கள்." என்று கூறினார்கள். (அஹமது)